விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)
VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 10 வியாழன் 24.06.2021 மலர் - 2, இதழ் - 79

# உலக நாடுகளை ஈர்க்கும் கோவின் செயல்

ராகுல் காந்தியும், சில எதிர்கட்சிகளும், சில சார்பு ஊடகங்களும் தொடர்ந்து கோவின் செயலியை விமர்சித்து வருகின்றனர். ஆனால், அதன் சிறப்பு, அவசியம், செயல்பாடு குறித்த உண்மையை பல உலக நாடுகள் அறிந்துள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்நாம், மெக்ஸிகோ, ஈராக், உக்ரைன் உள்ளிட்ட சுமார் 20 நாடுகள் இந்த செயலியை தங்கள் நாடுகளில் பயன்படுத்த ஆர்வம் காட்டியுள்ளன. இதற்காக சுகாதார அமைச்சகம், வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் இணைந்து ஒரு மெய் நிகர் சந்திப்பை 'கோவின் குளோபல் கான்க்ளேவ்' என்ற பெயரில் வரும் ஜூன் 30 அன்று ஏற்பாடு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கோவின் செயலி, ஒரு மேகக்கணினி சார்ந்த தகவல் தொழில்நுட்ப தளம். இது கோவிட் 19 தடுப்பூசி நிகழ்நேர கண்காணிப்புக்கான சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் (MoHFW) தொடங்கப்பட்டது.



விஜயபாரதம்

# குறைந்ததா சிமெண்ட் விலை?

தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, 'முதல்வர் ஸ்டாலினின் தலையீட்டால் ஏற்கனவே கிமெண்ட் விலை 30 ரூபாய் குறைக்கப்பட்ட நிலையில் இன்று மேலும் 25 ரூபாய் குறைந்து 2 நாட்களில் 55 ரூபாய் சரிந்துள்ளது. சிமெண்ட் விலை மூடைக்கு மேலும் 25 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர். கம்பியின் விலையும் 1100 ரூபாய் வரை குறைக்கப்பட்டுள்ளது' என பெருமிதத்துடன் தெரிவித்தார். ஆனால், அவரின் அறிக்கைப்படி சிமெண்ட் விலை, ரூ. 435 ஆக குறையும் என சொல்கிறார். ஆனால் அதன் முந்தைய விலை 380. எனவே, சிமெண்ட் விலை உண்மையில் ரூ. 55 உயர்ந்துள்ளதே தவிர, பழைய விலைக்கு குறையவில்லை. இதே நிலைதான் கம்பி உள்ளிட்ட பொருட்களுக்கும் என சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

விஜயபாரதம்



# தமிழக அரசுக்கு மாணவர்கள் கோரிக்கை



விஜயபாரதம்

கரோனா தொற்றுப் பரவல் காரணமாக கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏழை மாணவர்கள் ஆன்லைன் வகுப்பில் பங்கேற்க வசதியாக தமிழக கல்லூரி மாணவர்களுக்கு தினமும் 2 ஜிபி இலவச டேட்டா வழங்கும் திட்டத்தை கடந்த பிப்ரவரியில் அன்றைய முதல்வர் பழனிசாமி தொடங்கிவைத்தார். இது பல ஏழை மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருந்தது. இத்திட்டத்தின் பயன் கடந்த 18ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. எனவே, அந்த திட்டத்தை உடனடியாக மீண்டும் செயல்படுத்த வேண்டும் என அரசுக்கு கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆசிரியர் ஹபீப் முகம்மது கைது



விஜயபாரதம்

குறுவை ச ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் பள்ளிவாசல் இருபாலர் மேல்நிலைப்பள்ளி செயல்படுகிறது. அரசு உதவி பெறும் இப்பள்ளியில் அறிவியல் ஆசிரியராக முதுகுளத்தூரை சேர்ந்த ஹபீப் முகம்மது பணியாற்றுகிறார். இவர் 9, 10ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ஆன்லைன் மூலம் பாடம் நடத்தி வந்துள்ளார். அந்த மாணவிகளிடம் அவர் கடந்த ஓராண்டிற்கு மேலாக தனித்தனியாக பாலியல் ஆசைகளை தூண்டும்விதமாக பேசியுள்ளர். இதனை வெளியே சொன்னால் பெயிலாக்கி விடுவதாக மிரட்டியுள்ளார். இவ்வாறு பாலியல் வன்முறையை தூண்டும் விதமாக அவர் பேசும் ஆடியோ சமூக வலைத்தளங்களில் பரவியது. இதுகுறித்து ஒரு மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில், முதுகுளத்தூர் காவல்துறையினர், ஹபீப் முகம்மதுவை போக்சோ சட்டத்தில் கைது செய்தனர். சென்னை பத்மா சேஷாத்ரி பள்ளி ஆசிரியர் ராஜகோபாலன் விஷயத்தில் தீவிரம் காட்டிய தமிழக அரசும் ஊடகங்களும் இதில் எப்படி நடந்துக்கொள்ளப் போகின்றன என பொறுத்திருந்து பார்ப்போம்.

# காடேஸ்வரா சுப்ரமணியம் அறிக்கை



விஜயபாரதம்

ஆன்மீக அன்பர்கள், பக்தர்களுக்கு ஹிந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில், 'ஆலயங்கள் திறக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து களமிறங்குவோம். வரும் 25ம் தேதி, வெள்ளிக்கிழமை, பூட்டியிருக்கும் கோயில்கள் முன்பு கற்பூரம் ஏற்றி வழிபடுவோம்' என்று கோரிக்கை வைத்துள்ளார்.

# சென்னையில் லவ் ஜிஹாத்



விஜயபாரதம்

சென்னை ஆவடியை சேர்ந்த சாதிக் பாட்ஷா என்பவர் ஸ்னேகா எனும் ஒரு ஹிந்து பெண்ணை கடத்திச் சென்று கட்டாயத் திருமணம் செய்ய முயன்றுள்ளார். புகாரின் பேரில் அவரை காவல்துறையினர் கைது செய்தனர். சாதிக் பாட்ஷாவுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பொய் குற்றச்சாட்டு கூறியவர்கள் மீது வழக்கு

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ஸ்ரீராமபிரான் கோயிலின் கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. உத்தரபிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அதில் அரசியல் ஆதாயம் அடைய காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகள், இக்கோயில் விஷயத்தில் பல பொய்யான குற்றச்சாடுகளை முன்வைத்து வருகின்றன. அவ்வகையில், ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ராவின் பொதுச் செயலாளராக உள்ள வி.எச்.பி தலைவர் சம்பத் ராய் மீது உ.பி பிஜ்னோர் நகரைச் சேர்ந்த வினீத் நாராயண், அல்கா லஹோட்டி மற்றும் ரஜ்னீஷ் ஆகியோர் ஒரு பொய்யான நில அபகரிப்புப் புகாரை கூறினர். இதனால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதனையடுத்து அவர்கள் மீது, 153 ஏ, 193, 295ஏ, 448, 419, 417, 465, 487, 409, 470, 471, 504, 505 (1 ) (இ), 505 (2) & 507 மற்றும் 66 (ஈ), ஐடி சட்டம் 71 & 74 ஆகிய ஐ.பி.சி பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# குழுக்கள் மேல் குழுக்கள்

புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி தன் அறிக்கையில், 'ஆட்சிக்கு வந்த 45 நாட்களில் 'நீட்' தேர்வு குறித்து குழு, மாநில நிதி ஆதாரம் குறித்து ஆராய குழு, கறுப்பு பூஞ்சை கண்டறிய குழு, கொரோனா குறித்து ஆராய குழு என, பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இது போதாது என முதல்வருக்கான பொருளாதார ஆலோசனை குழு அமைக்கப்படுகிறது!!!' என தி.மு.க அரசை கிண்டல் அடித்துள்ளார். மேலும், 'பாரதப் பேரரசை முறையாக அடையாளப் படுத்தாமல் ஒன்றிய அரசு என தொடர்ந்து இழிவுபடுத்துவது தேச பக்தர்களிடம் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சட்டசபை பதிவேடுகளிலும் இனி இது இடம்பெற்று விடும். இது கவர்னர் கவனத்திற்கு வரவில்லையா என தெரியவில்லை' என தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

விஜயபாரதம்



# விவசாய மானிய முறைக்கேடு



விஜயபாரதம்

தமிழகத்தில் வேளாண்மை துறையில், விவசாயிகளிடம் விதைகள் கொள்முதல் முறைகேடு, போலி பெயர் பட்டியல், பூச்சி மருந்து, உரம் உரிமம் வழங்கியதில் விதிமீறல், சொட்டுநீர் பாசனக் கருவிகள் வாங்கியதில் ஊழல் என விவசாய மானிய திட்டங்களில் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் நடந்துள்ளது. இதனை விசாரணை செய்யக் கோரிய மனு மீது தமிழக தலைமைச் செயலாளர், லஞ்ச ஒழிப்புத்துறை ஆணையர், இயக்குனர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, நடவடிக்கை எடுக்கக்கோரி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிமன்றம், புகாருக்கு உரியவர்களை எதிர் மனுதாரராக சேர்க்க சொல்லி விசாரணையை ஆகஸ்ட் 17க்கு ஒத்தி வைத்தது.



விஜயபாரதம்

# ஐ.எம்.ஏ. கிளப்பும் புதிய சர்ச்சை

உத்தரகாண்ட் ஆயுர்வேத பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் அம்மாநில ஆயுஷ் மந்திரி ஹரக்சிங் ரவத் கலந்து கொண்டார். அப்போது அவர், 'உட்புற மலைக் கிராமங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, அவசர காலங்களில் சில குறிப்பிட்ட அலோபதி மருந்துகளை பரிந்துரைக்க ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அனுமதி வழங்குவது என்று முடிவு செய்துள்ளோம். இங்குள்ள ஆயுர்வேத மருத்துவர்களில் பெரும்பாலானோர் மலைப்பகுதிகளில்தான் இருக்கிறார்கள்.' என்று கூறினார். இதற்கு இந்திய மருத்துவ சங்கத்தின் உத்தரகாண்ட் மாநில பிரிவு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அதன் செயலாளர் அஜய்கன்னா, 'இந்த முடிவு சட்டவிரோதமானது. இது, கலவை மருத்துவம் ஆகிவிடும். நோயாளிகளுக்கு தீங்கு விளைவிக்கும்' என தெரிவித்துள்ளார். ஆனால், இந்த எதிர்ப்பை பாரதீய சிகிட்சா பரிஷத் என்ற அமைப்பு நிராகரித்துள்ளது.

# பெயரை மாற்ற கங்கனா வலியுறுத்தல்



விஜயபாரதம்

பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத், நமது நாட்டின் பெயரை 'இந்தியா' என்பதற்குப் பதிலாக 'பாரத்' என்று மாற்ற வேண்டும் என தனது சமூக வலைத்தள பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார். அதில், 'பிரிட்டிஷார் நமக்குக் கொடுத்த 'இந்தியா' என்ற பெயர் அடிமைப் பெயராக உள்ளது. எனவே இதை மாற்றி நமது நாட்டின் பழைய பெயரான 'பாரதம்' என்பதையே வைக்க வேண்டும். நாம் அடிமைப் படுத்தப்படுவதற்கு முன்னதாகவே கலாச்சாரம் மிகுந்தவர்களாகவும், நாகரீகம் மிக்கவர்களாகவும் இருந்தோம். பாரதம் அதன் பண்டைய ஆன்மிகம், ஞானத்தில் வேரூன்றியிருந்தால் மட்டுமே உயர முடியும். அதுவே நமது மிகப் பெரிய நாகரிகத்தின் ஆன்மாவாக விளங்கக்கூடும். நகர்ப்புற வளர்ச்சியில் நாம் உயர்ந்தாலும், மேற்கத்திய உலகின் மலிவான நகலாக இல்லாமல், வேதங்கள், பகவத் கீதை மற்றும் யோகாவில் ஆழமாக வேரூன்றி இருந்தால், உலகின் மிகப்பெரிய நாடாக வெளிப்படுவோம்' என்று கூறியுள்ளார்.

## பிபின் ராவத் கிண்டல்


விஜயபாரதம்

முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் அளித்த பேட்டி ஒன்றில், 'கல்வானில் பாரத வீரர்களுடன் நடந்த மோதலுக்குப் பிறகு, எல்லையில் சீன வீரர்கள் குவிப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது, தங்களுக்கு மேலும் பயிற்சி தேவை, இன்னும் சிறந்த முறையில் தயாராக வேண்டும் என்பதை சீன வீரர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் பயிற்சி பெற்ற சீன வீரர்கள்தான் வந்துள்ளனர். அவர்களுக்கு, அப்பகுதிகளில் போரிட தேவையான பயிற்சிகள் இருந்திருக்காது. திபெத் மலைப்பிரதேசம். இங்கு, பணி செய்யும் முன்பு நன்றாக பயிற்சி இருக்க வேண்டும். நமது பாரதத்தில், மலைப்பகுதிகளில் அதிக பயிற்சி மையங்கள் உள்ளன. அங்கு, நமது வீரர்களுக்கு நன்றாக பயிற்சி அளிக்கப்படுகிறது. மலைப்பகுதிகளில் நாம் தொடர்ந்து தங்கி செயல்பட்டுக்கொண்டு உள்ளோம். ஆனால், சீனா அப்படி அல்ல. சீனப்படைகளின் நடமாட்டம் மற்றும் நடவடிக்கைகளை நமது வீரர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

## மின் வணிக மோசடி


விஜயபாரதம்


இ - காமர்ஸ் எனப்படும் மின்னணு வணிகத்தில் நடைபெறும் மோசடிகளை தடுக்கும் வகையில், நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 2020ல் மாற்றங்களைக் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. நியாயமற்ற வர்த்தகம், மோசடிகள், நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றை தடுக்க இந்த மேம்பாடுகள் செய்யப்படுகின்றன. மேலும், குறைதீர் அதிகாரி நியமனம், வர்த்தகப் பதிவு எண் பெறுதல், பொருட்கள் குறித்த தவறான சித்தரிப்பு தடுப்பு, உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம், சேவைக் குறைபாடு தடுப்பு உள்ளிட்டவைகளும் இந்த சீர்திருத்தங்களில் இடம் பெறுகின்றன.

## மதமாற்ற ஜிஹாதிகள் மீது என்.எஸ்.ஏ.


விஜயபாரதம்

ஆயிரத்திற்கும் அதிகமான ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்களை முஸ்லிமாக மதம் மாற்றி பயங்கரவாதத்திற்கு ஊக்குவித்த முப்தி காசி ஜஹாங்கிர் ஆலம், முகமது ஒமர் கௌதம் ஆகியோரை கடந்த ஜூன் 21 அன்று உத்தர பிரதேச சிறப்பு அதிரடிப்படை கைது செய்தது. விசாரணையில் அவர்களுக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உள்ளிட்ட பல வெளிநாடுகள் நிதியுதவி அளித்ததும், மதம் மாற்றப்பட்டவர்களை தேவைப்படும்போது மனித வெடிகுண்டுகளாக பயன்படுத்த அவர்கள் முயற்சித்ததும் தெரியவந்தது. இதனால், அவர்கள் மீது தற்போது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரிக்க அம்மாநில முதல்வர் யோகி ஆதித்தியநாத் அறிவுறுத்தியுள்ளார்.

# பாகிஸ்தான் குறித்து ஜெய்சங்கர்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தான் குறித்த ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விவாதத்தில், பாரத வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது, 'பாரதம் ஒருபோதும் பயங்கரவாதத்தை சகித்துக் கொண்டிருக்காது. கடந்த பல ஆண்டுகளாக அண்டை நாட்டில் இருந்து காஷ்மீர் எல்லை வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவுகின்றனர். பல்வேறு பயங்கரவாத அமைப்பினர் வன்முறை செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களால் தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. பாரதத்துடன் மறைமுகமாக மோதிவரும் பாகிஸ்தான், மறுபுறம் ஆப்கானிஸ்தானுடன் மோதிவருகிறது. தாலிபான் அங்கு பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபடுகிறது. சிறுபான்மையினர், பெண்கள், குழந்தைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்க ஆப்கானிஸ்தானுக்கு பாரதம் ஆதரவாக இருக்கும். பயங்கரவாதிகளின் சொர்கபுரியாகத் திகழும் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அங்கு அமைதி நிலை நாட்டப்படும்.எங்கள் எல்லைப் பகுதியில் அச்சுறுத்தல் ஏற்படுத்தினால் தக்க பதிலடி கொடுக்கப்படும்' என்று பாகிஸ்தானை மறைமுகமாகக் குறிப்பிட்டு பேசினார்.

# மோசடியாளர்களின் சொத்துக்கள்



விஜயபாரதம்

முந்தைய காங்கிரஸ் அரசு ஆட்சி காலத்தில், வங்கியில் கடன் வாங்கி மோசடியில் ஈடுபட்டு வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள தொழிலதிபர்கள் விஜய் மல்லையா, நீரவ் மோடி, மெகுல் சோக்சி உள்ளிட்டோரின் சொத்துக்கள் பொதுத்துறை வங்கிகளுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. எனவே அவற்றை வங்கிகள் விற்பனை செய்து தங்கள் நஷ்டத்தை ஈடு செய்யலாம். அமலாக்கத்துறையால் கைப்பற்றப்பட்டுள்ள இந்த சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலமாக வங்கிகளுக்கு சுமார் 8,000 கோடி வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

# பாதுகாப்புத் துறை இணையத்தில் ஊடுருவ முயற்சி

மேற்கு வங்கத்தின் மால்டா மாவட்டத்தில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட சீன நாட்டைச் சேர்ந்த ஹான் ஜுன்வேவை என்பவரை, சிறப்பு பணிக்குழு (எஸ்.டி.எஃப்) அதிகாரிகள் விசாரணை செய்தபோது, பாரதத்தின் பாதுகாப்பு அமைச்சகம், ராணுவம் உள்ளிட்ட பல்வேறு வலைத்தளங்களை ஹேக் செய்ய சீனா முயற்சிக்கிறது. அமைச்சகம், பி.எஸ்.என்.எல், சில விண்வெளி நிறுவனங்கள், ஏஜென்சிகளும் அவர்களது இலக்குகளில் உள்ளன என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். ஹான் ஜுன்வேவும் அவரது கூட்டாளிகளும் 1,300 இந்திய சிம் கார்டுகளை தங்கள் நாட்டிற்கு கடத்திச் சென்றுள்ளனர். அவற்றை ஹேக் செய்வதற்கும் நிதி மோசடிகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு இங்குள்ள கம்யூனிச, மாவோயிச, பயங்கரவாத அமைப்புகளுடனான தொடர்புகள் குறித்தும் விசாரிக்கப்படுகிறது.

விஜயபாரதம்



# பாகிஸ்தானில் அமெரிக்க ராணுவ தளம்



விஜயபாரதம்

சமீபகாலமாக சீனாவின் பக்கம் அதிகமாக சாய்ந்து வரும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு எழுதியுள்ள ஒரு கட்டுரையில், 'ஆப்கானிஸ்தானில் பின்லேடனை தேடும் பணிக்காக பாகிஸ்தான் மண்ணில் அமெரிக்க படைகளுக்கு இடம் அளிக்கப்பட்டது. இதன் காரணமாக 70,000த்திற்கும் அதிகமான பாகிஸ்தானியர்கள் உயிரிழந்தனர். அமெரிக்கா எங்களுக்கு உதவியது. ஆனால் அதனால் பாகிஸ்தான் பொருளாதாரம் அதிகமாக பாதிக்கப்பட்டது. தலிபான்களுக்கு எதிரிகளாக ஆனோம். மேலும் பாகிஸ்தானில் தெஹ்ரிக் இ தலிபான் உள்ளிட்ட பல பயங்கரவாத குழுவினரும் பாகிஸ்தானிற்கு எதிராக செயல்பட்டனர். அமெரிக்காவின் ராணுவ தளம் அமைக்க ஏற்கனவே இடம் அளித்து பெரிய தவறு செய்து விட்டோம். இனி அந்த தவறை செய்ய மாட்டோம்' என தெரிவித்துள்ளார்.

# ராணா நாடு கடத்தப்படுவாரா?

மும்பையில் கடந்த 2008ல் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில், 166 பேர் கொல்லப்பட்டனர். இதில் முக்கிய குற்றவாளியான டேவிட் ஹெட்லி அமெரிக்காவில் 35 ஆண்டு சிறை தண்டனை அனுபவித்து வருகிறார். இத்தாக்குதலில் ஹெட்லிக்கு உதவிய அவரது நண்பரும் கனடா தொழிலதிபருமான தஹவூர் ராணா, அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார். ராணாவை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து, நாடு கடத்தக் கோரி, அமெரிக்க நீதிமன்றத்தில், சி.பி.ஐ மனு தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது. இதில் பாரதத்திற்கு ஆதரவாக தீர்ப்பு வரும்பட்சத்தில் ராணா நாடு கடத்தப்படலாம். இதற்காக, சி.பி.ஐ., அதிகாரிகள் அமெரிக்கா சென்றுள்ளனர்.





விஜயபாரதம்

# மத்திய அரசா ஒன்றிய அரசா?

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த தி.மு.க தலைமையிலான அரசு, மத்திய அரசை ஒன்றிய அரசு ஒன்றே அழைத்து வருகிறது. இதற்கு கடும் விமர்சனங்கள் எழுந்தன. இதற்கு முன்பு அண்ணா, கருணாநிதிகூட தங்களது ஆட்சி காலங்களில் இதுபோன்ற சொல்லை பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், சட்டப்பேரவை கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு என்ற சொல்லுக்கு பொருள் என்ன என்று பா,ஜ,க எம்எல்ஏ நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த முதலமைச்சர் ஸ்டாலின், “கூட்டாட்சி தத்துவ அடிப்படையில் ஒன்றிய அரசு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அரசியலமைப்பு சட்டத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ, அதன்படியே இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும், ஒன்றிய அரசு எனக் கூறுவதை குற்றமாக பார்க்க வேண்டாம். ஒன்றிய அரசு என்ற சொல்லையே தமிழக அரசு தொடர்ந்து பயன்படுத்தும்,” எனக் கூறியுள்ளார்.

### இது ஒன்றிய அரசா?

இதற்கு ஒரு எளிய உதாரணம் அமெரிக்கா. பல மாநிலங்கள் ஒன்று சேர்த்து உருவாக்கியதுதான் அமெரிக்கா. ஆனால் பாரதம் பல மாநிலங்களை கொண்டது. அதாவது பாரதம் என்ற நம் தாய்நாடு, தன் நிர்வாக வசதிக்காக உருவாக்கியது தான் மாநிலங்கள். அப்படியெனில், பாரதம் மாநிலங்களை கொண்ட ஒரு முழுமை. அதனை பிரிக்க முடியாது. அது மாநிலங்களால் ஆன ஒன்றியம் அல்ல. மாநிலங்களின் கூட்டமைப்பும் அல்ல. இதை முதல்வரும் அவரது தி.மு.க அரசும் தெரிந்துகொள்ளாமல் இருப்பது நம் சாபக்கேடு.

### மொழிவாரி பிரிப்பு:


பாரதத்தில் மொழிவாரி மாநில உருவாக்கத்துக்கு முன்பாக தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகியவை ஒரே மாநிலமாகத்தானே இருந்தன? இன்றும் புதுவை மக்களும், தமிழக மக்களும், கேரளாவில் சில பகுதியை சேர்ந்தவர்களும் பேசுவது தமிழ் மொழி. ஆனால் வாழ்வதோ வேறு வேறு மாநிலங்கள். அதேபோல சமீபத்தில் பிரிக்கப்பட்ட தெலுங்கானா மக்களும் அந்திர மக்களும் பேசுவது தெலுங்குதான், ஆனால் அவை இரண்டும் வேறு வேறு மாநிலங்கள். இன்னும் சொல்லப்போனால், நாளையே தமிழகமே வடக்கு, தெற்கு என தனித்தனி மாநிலங்களாக பிரிக்கப்படலாம். அதற்கு மத்திய அரசுக்கு உரிமையும் உள்ளது. அம்பேத்கர் வகுத்துத் தந்த இதை அரசியலமைப்பு சொல்கிறது. ஆனால் நாம் பேசும் மொழி என்னவோ தமிழ்தான். இதன் மூலம், நமது நாடு ஒன்றுதான். அது நிர்வாக வசதிக்காகவே பல மாநிலங்களை உருவாக்கியது என்பது தெளிவாகிறது.

எப்படி அழைக்க வேண்டும்?

நமது அரசியலமைப்பில், நமது அரசு தெளிவாக இந்திய அரசு (Government of India) அல்லது மத்திய அரசு (Central Government) என்று மட்டுமே தெளிவாக குறிப்பிடப்படுகிறது. இதை தவிர வேறு எப்படி நமது அரசை அழைத்தாலும் அது குற்றமே. அது, நமக்கு சுதந்திரம் பெற்றுத்தந்த பல லட்சம் சுதந்திர போராட்ட வீரர்கள், நமக்கு அரசியலைப்பு சட்டத்தை உருவாக்கித் தந்த அம்பேத்கார், அவர் எழுதிய அரசியலமைப்பு சட்டம் ஆகியவற்றை ஒருசேர அவமதிப்பதற்கு ஒப்பாகும்.

மதிமுகன்

விஜயபாரதம்




## பரதன் பதில்

*பின் வரும் காரணங்களில் எதனை மனதில் வைத்து முதல்வர் ஸ்டாலின் பொருளாதார ஆலோசனைக் குழுவை அமைத்திருப்பார்? தமிழக நிதியமைச்சருக்கு விவரம் போதாது. திராவிடவாதிகளுக்கு விஷய ஞானம் இல்லை. பிராமண எதிர்ப்பு வெறும் வேஷம். அக்குழுவினருக்கு கோடிகளில் சம்பளம் தர தமிழகத்தில் நிதி அதிகமாக உள்ளது. இதில் இடம்பெற்றுள்ள வெளிநாட்டினருக்கு தமிழகம், அதன் அரசியல், இலவசங்கள் குறித்து நன்றாக தெரியும்?*

**- வா. பிரேம்குமார், திருவான்மியூர்**

ஒன்றுக்கு மேல் தேர்வு செய்தால் கோபித்துக்கொள்வீர்களா?

**விஜயபாரதம் தேசிய வார இதழ்**

**சந்தா செலுத்த / புதுப்பிக்க**
**www.vijayabharatham.org**
**என்ற இணையதளம் அல்லது**
**044 - 26420870 என்ற தொலைபேசி**
**எண்ணில் தொடர்பு கொள்ளவும் .**

**9313 99006**

# ராணி துர்காவதி



விஜயபாரதம்

இந்தியப் பெண்கள், ஆண்களுக்கு சிறிதும் சளைத்தவர்களல்ல; போர் முனையிலும் கூட சாகசங்களை நிகழ்த்தியவர்கள் என்பதற்கு பல சான்றாதாரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான், கோண்ட்வானா ராணி துர்காவதியின் தீரம் மிகு சரித்திரம்.

ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த, சந்தேல் மன்னர் பரம்பரையில் மன்னர் கீர்த்திராயின் மகளாக பிறந்தார் துர்காவதி.

அவர் பரம்பரைக்கு ஆக்கிரமிப்பாளன் கஜினி முகமதுவை எதிர்த்துப் போரிட்ட பாரம்பரியம் உண்டு. அந்தப் பரம்பரையில் வந்த துர்காவதியும் தனது வீர பராக்கிரமத்தால் சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்.

கோண்ட்வானா ராஜ்ஜியத்தின் மன்னர் சங்க்ராம் ஷாவின் மைந்தர் தல்பத் ஷாவை திருமணம் செய்தார் துர்காவதி. இரு நாட்டுவீரர்களும் இணைந்து ஷேர்ஷா ஷுரியின் படையெடுப்பை முறியடித்தனர். ஷேர்ஷா கொல்லப்பட்டார். அதே ஆண்டு ராணி துர்காவதி வீர்நாராயண் என்ற மகனை ஈன்றார்.

வீர்நாராயணனுக்கு ஐந்து வயது இருக்கும்போது மன்னர் தல்பத்ஷா இறந்தார். மகனை முன்னிறுத்தி, ராணி துர்காவதியே நாட்டை ஆட்சி செய்தார். தனது மதியூகமும் நிர்வாகத் திறனும் கொண்டு நாட்டை சிறப்பாக ஆண்டுவந்தார்.

ராணி துர்காவதியின் நாட்டின் செல்வச் செழிப்பு குறித்து கேள்வியுற்ற அக்பர் அதனையும் ஆக்கிரமிக்க விரும்பினார். தனது தளபதியை படையெடுக்கப் பணித்தார். முகலாயப் பேரரசின் படைபலத்தை விளக்கிய திவான், அக்பருடன் சமாதானமாகப் போவதே நல்லது என்று ராணிக்கு அறிவுரை கூறினார்.

ஆனால், அவமானப்பட்டு உயிர் வாழ்வதைவிட, தன்மானத்துடன் சாகவே விரும்புகிறேன் என்று முழங்கிய ராணி துர்காவதி; தனது படைகளை போருக்கு ஆயத்தப்படுத்தினார்.

போரில் ராணி துர்காவதியின் கரமே ஓங்கியது. போருக்கு முன்னதாக, இரவே முஸ்லிம் படைகளை தாக்க எண்ணிய ராணி துர்காவதி அது போர் தர்மமல்ல என்பதால் இரவுத் தாக்குதலைக் கைவிட்டார்.

மறுநாள் தில்லியிலிருந்து வந்த பெரும் பீரங்கிப்படை முன் தாக்குப்பிடிக்க முடியாமல் கோண்ட்வானா வீரர்கள் பலியாகினர். வீர் நாரயணும் படுகாயமுற்று போர்க்களத்திலிருந்து விலகினார். ஆயினும் ராணி துர்காவதி சளைக்காமல் போரில் ஈடுபட்டார்.

அப்போது எதிரிப்படையினரின் அம்புகள் ராணி துர்காவதியின் கழுத்தை துளைத்தன. தோல்வியுற்று எதிரியின் கரத்தில் சிக்குவதை விட, உயிரை மாய்த்துக் கொள்வதே சிறப்பானது' என்று ராணி துர்காவதி, தனது குறுவாளால் மார்பில் குத்திக்கொண்டு போர்க்களத்திலேயே (1564, ஜூன் 24) உயிர்நீத்தார்.

# கவியரசர் கண்ணதாசன்



விஜயபாரதம்

சிவகங்கை, காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டியில் பிறந்தார் கவிஞர் கண்ணதாசன். இயற்பெயர் முத்தையா. பத்திரிகை ஆசிரியர் பணிக்காக வைத்துக் கொண்ட புனைப்பெயர்தான் 'கண்ணதாசன்'. இருபதாம் நூற்றாண்டு கவிதை உலகில் பாரதியார், பாரதிதாசன் இருவரையும் தொடர்ந்து கவிஞர் கண்ணதாசனுக்கும் நிலையான ஓர் இடம் உண்டு.

கவிஞரது எழுத்து அவரது தலையெழுத்தை மாற்றியது. திரைப்படம் சொல்ல வேண்டியதையும், சொல்லத் தவறியதையும் இவர் தனது பாடல்கள் வழியாகக் கூறினார். உதாரணமாக, தன் தேர்தல் தோல்விக்குப் பின் 'புத்தியுள்ள மனிதரெல்லாம், வெற்றி காண்பதில்லை, வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை' என நகைச்சுவையாக பாடல் எழுதினார். இறைவன் என்றால் யார்? என்ற கேள்விகளுக்கு 'அன்பு ஆசை கோபம் களவு கொள்பவன் பேச தெரிந்த மிருகம், நன்றி கருணை கொள்பவன் மனித வடிவில் தெய்வம்' என மற்றொரு பாடலில் விளக்கியுள்ளார்.

திருக்குறளின் தாக்கம் கம்பனிடத்திலும், கம்பனின் தாக்கம் கவிஞரிடத்திலும் காண முடியும். தமிழ்க் கவிதை உலகில் 33 ஆண்டு காலம் உலா வந்து, ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட திரையிசைப் பாடல்களை எழுதிக் குவித்தவர் கவிஞர் கண்ணதாசன். கதை, வசனங்கள், நாவல்கள், சுயசரிதை, நாடகங்கள், பாடல்கள் எழுதி தன் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தினார் கவிஞர்.

சண்டமாருதம், திருமகள் உள்ளிட்ட பல்வேறு இதழ்களின் ஆசிரியராகவும் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தார் கண்ணதாசன். ஆரம்பத்தில் கூடா நட்பால் இவர் சில காலம் நாத்திகராகவும் இருந்தார். ஆனால், இறையருளால் மனம் மாறினார். பின்னர் அவர் படைத்த 'அர்த்தமுள்ள ஹிந்து மதம்' என்ற புத்தகத்தில் ஹிந்து சமயத்தின் பல்வேறு தத்துவங்களையும், அத்தத்துவங்களில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களையும் பாமரனுக்கும் புரியும் விதத்தில் எளிமையாகக் கொண்டு சேர்த்தார். .

வனவாசம் எனும் தன் சுயசரிதையில் யாரும் கூறா வண்ணம் வாழ்வில் தான் செய்த அனைத்து முட்டாள்தனங்களையும், அதனால் வந்த புரிதல்களையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்திய வெள்ளை உள்ளம் கொண்ட ஒரு உன்னதக் கவிஞர் கண்ணதாசன்.

'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்று பாடிய

கவிஞர் கண்ணதாசனின் பிறந்த தினம் இன்று.